விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 11 ஞாயிற்றுக்கிழமை (27.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 242

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## மூதூரில் கிபீர்த் தாக்குதல் இருவர் பலி;ஐவர் படுகாயம்

(கொழும்பு)

திருகோணமலை மூதூர் கிழக்கில் விமா னப்படையின் கிபீர் விமானங்கள் நேற்றுப் பிற்பகல் நடத்திய குண்டு வீச்சில் பொதுமக்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.ஐந்துபேர் படுகாயமடைந்துள்ளனர்.

மூதூர் கிழக்கில் விமானப்படையினர் துறைமுகத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் ஒரு மணி முதல் சரமாரியான எறிகணைத் தாக்குதலையும் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் விமானப்படையின் கிபீர் விமானங்கள் பல முறை குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளன. இத் தாக்குதல்களில் இலங்கைத்துறைமுகத்துவாரப் பகுதியில் பொது மக்கள் இருவர் கொல்லப்பட்டனர்.ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்தனர். (ச)

## ஊரடங்கு முழுமையாக நீக்கப்படும்வரை பாடசாலை ஆரம்பிப்பது சாத்தியமில்லை

### கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(திருகோணமலை)

யாழ்ப்பாணத்தில் முழுமையாக ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் வரை பாடசாலைகளை ஆரம்பிப்பது சாத்தியமில்லை என வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் சில மணிநேரமே தளர்த்தப்படுகின்றது. அந்த நேரத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பது சாத்தியமற்றது.எனினும் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இயங்கக்கூடிய நிலையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதற்காக ஆரம்பிக்கப்படவேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலையில் குண்டுத் தாக்குதல்

# ஆறு இராணுவத்தினர் உயிரிழப்பு

## மேலும் நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் இராணுவத்தினரை இலக்கு வைத்து விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

முகமாலையில் வீதிச் சுற்றுக் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே இத் தாக்குதலில் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுப் பிரஜைகளுடன்

## மூன்றாவது பொலிஸாரும் புலிகளால் விடுதலையானார்

### கண்ணீர் மல்க விடைபெற்றார்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த பொலிஸார் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் பதவியில் இருந்து விலகிச் செல்லும் உல்ப் ஹென்றிக்சனின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிஸாரை தமிழீழ தேசிய தலைமைப்பீடம்



# வெளிநாட்டுப் பிரஜைகளுடன் நேற்று கப்பல் புறப்பட்டது

## இன்று காலை திருமலையைச் சென்றடையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்த வெளிநாட்டு பிரஜைகள் மற்றும் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு ஐ.சி.ஆர்.சியின் கப்பல் நேற்று திருகோணமலையை நோக்கிப்புறப்பட்டது.

பிற்பகல் 3.30 மணிக்கு இங்கிருந்து புறப்பட்ட அக் கப்பல் இன்று காலை 8 மணிக்கு திருகோணமலை துறைமுகத்தைச் சென்றடையவுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட சேருவில என்ற அக் கப்பலில் பிரிட்டன் , கனடா மற்றும் நியூசிலாந்தைச் சேர்ந்த 149 பேரும் இரு அரச ஊழியர்களும்,ஆறு நோயாளர்கள் மற்றும் மரணச் சடங்குகளுக்காகச் செல்வோரும் பயணித்தனர்.

இதேவேளை சரக்குப்கப்பல் எதனையும் மீண்டும் அனுப்புவதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# மற்றொரு பயணிகள் கப்பல் யாழ்.நோக்கிப் புறப்பட்டது

## செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)


யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிநாட்டவர்களை திருகோணமலைக்கு அழைத்துச் செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் விசேட பயணிகள் கப்பல் ஒன்று நேற்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது.

மருத்துவர்கள் அதிகாரிகள் குழுவொன்று இக் கப்பலில் பயணம் செய்வதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் குறிப்பிட்ட கப்பல் யாழ்.நோக்கி புறப்படத் தயாரானதாகவும் பின்னர் நேற்று வரை பிற்போடப்பட்டதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் சுகுமார் (04 ஆம் பக்கம் பார்க்க)

கோளுக்கு இணங்க தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிஸாரை தமிழீழ தேசிய தலைமைப்பீடம் நேற்று விடுதலை செய்ய உத்தரவிட்டது.

இதற்கமைய விடுதலை செய்யப்பட்ட பொலிஸார் கிளிநொச்சிக்கு இரு நாள் பயணமாக வருகை தந்திருந்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம்



ஒப்படைக்கப்பட்டார் என விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரசேகரன் அரசில் இணைந்தமைக்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்பு !

(கொழும்பு)

அரசாங்கத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணியைசேர்த்துள்ளமைக்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது குறித்து மகிந்தவுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மகிந்த சிந்தனை நல்லது என அவர்கள் உணர்ந்திருந்தால் (04 ஆம் பக்கம் பார்க்க)

# அதிரடிப்படையினரின் தாக்குதலில் அரசியல்துறைப் போராளி பலி

அம்பாறையில் சிறப்பு அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை திருக்கோவில் தம்புலுவில் வீதியில் அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் அரசியல்துறைப் போராளியான சுடர் (வயது 21) என்பவர் வீரச்சாவடைந்ததாக அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா தெரிவித்துள்ளார்.

இதனிடையே தாக்குதல் ஒன்றில் பொலிஸார் இருவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தந்தையும் தனயனும் நள்ளிரவில் சுட்டுக்கொலை

கொஸ்கொட கொடகம பகுதியில் வீட்டினுள் படுக்கையில் இருந்த நிலையில் தந்தையும் மகனும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டினுள் நேற்றிரவு 9 மணியளவில் புகுந்த இனந்தெரியாத நான்கு பேர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதாக கொஸ்கொட பொலிஸ் நிலைய அதிகாரி ரமிந்த டி சில்வா தெரிவித்தார்.

துப்பாக்கிச் சூட்டையடுத்து படுகாயமடைந்த தந்தையும் மகனும் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் உயிரிழந்துள்ளார்கள்.

இச் சம்பவத்திற்குத் தனிப்பட்ட விரோதமே காரணம் என அப் பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 30 வயதுடைய தந்தையும் 7 வயதுடைய மகனுமே கொல்லப்பட்டவர்களாவர். (ச-7)



செஞ்சிலுவைச்சங்கத்தின் வழித்துணையுடன் திருமலை நோக்கி புறப்படும் செருவா கப்பலில் செல்வதற்கு பயண ஆயத்தங்களுடன் சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் குழுமி இருக்கும் பயணிகள்.

-படங்கள்:-திலீவின்பன்

# ஓமந்தைச் சோதனைச் சாவடி மூடப்பட்டதால் வன்னியில் பட்டினிச் சாவு ஏற்படும் அபாயம்

## உலக உணவுத் திட்ட அமைப்பு எச்சரிக்கை

இராணுவத்தினரால் ஓமந்தை சோதனைச் சாவடி மூடப்பட்டமையால் வன்னிப் பிரதேசத்தில் பட்டினிச் சாவு அவலம் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உலக உணவுத் திட்டஅமைப்பின் வதிவிடப் பிரதிநிதி வெளியிட்ட அறிக்கை வருமாறு;

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர் நடவடிக்கைகளால் ஏ-9வீதி மூடப்பட்டுள்ளது. இந்த வீதி உடனே திறக்காவிட்டால் இடம்பெயர்ந்துள்ள 37 ஆயிரம் மக்கள் உள்ளிட்ட 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் பட்டினிச் சாவு அவலத்திற்கு முகம்கொடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் அனுமதித்தால் வன்னிப் பிரதேசத்தில் அவசர மனிதாபிமான தேவைகளை நிறைவு செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரிகள் தங்களது சொந்தப் பாதுகாப்பில் கூட செல்லத் தயாராகவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேச உணவு நிலைமை சிக்கலாகி வருகிறது.உலக உணவுத் திட்ட அமைப்பின் உணவுப் பொருட்கள் கையிருப்பும் குறைந்துவருகிறது. உணவு மற்றும் எரிபொருள் விலை அதிகரித்துள்ளன.

அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள்சபை பிரதிநிதிகளுக்கும் இடையே அரசாங்கக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் நிலவும் மனிதாபிமான தேவைகள் குறித்து உயர் நிலைப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோதிலும் அது தீர்க்கப்படவில்லை என அதில் கூறப்பட்டது.

அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து மொத்தமாக உள்நாட்டில் இரண்டு லட்சத்து 4 ஆயிரத்து 602 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இந்த ஆண்டு முடிபடைவதற்குள் இந்த எண்ணிக்கை 4 லட்சமாக அதிகரிக்கக் கூடும். அதற்கு முகம் கொடுக்க உலக உணவுத் திட்டம் தயாராகி வருகிறது.

தற்போதைய இனப்பிரச்சினையால் தாய் மற்றும் சேய் போசாக்கு உணவுத் திட்டத்தின் கீழான 50 ஆயிரம் பயனாளிகள் பாதிப்படைந்துள்ளனர் என்றார் அவர். (ச)

# நேரத்திற்கு நேரம் மாறும் சிற்றூர்திக் கட்டணம்

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட நேரத்தில் சேவையில் ஈடுபடும் சில சிற்றூர்திகள் தம் இஷ்டப்படி கட்டணத்தை உயர்த்தி வருவதாகத் தெரிகிறது.

குறிப்பாக வலிகாமப் பகுதியில் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள் தமது வசதிக்கேற்ற விதத்தில் கட்டணங்களை அறவிடுவதாகத் தெரிகிறது.

சித்தன்கேணியிலிருந்து யாழ்.வருவதற்கு 50 ரூபாமுதல் 25 ரூபா என நேரத்திற்கேற்ப கட்டணங்கள் அறவிடப்படுவதாக பயணிகள் தெரிவிக்கிறார்கள்.

இதேநேரத்தில் சித்தன்கேணி-யாழ்ப்பாணத்திற்கான கட்டணம் 18 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

(து-133)

# விமான சேவை இடைநிறுத்தம்

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே நடைபெற்று வந்த எக்ஸ்போ -எயர் பயணிகள் விமான சேவை ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட நாளிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.நிலைமை சீரானதும் இவ் விமான சேவை மீள ஆரம்பமாகும் எனவும் அது பற்றி விபரம் உரிய நேரத்தில் ஊடகங்களினூடாக பொதுமக்களுக்கு அறியத்தரப்படும் எனவும் யாழ்.பிராந்திய முகாமையாளர் தெரிவித் துள்ளார். (து-133)

# கூட்டுறவுச் சங்கங்களில் அதிக விலையில் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

## மக்கள் குற்றஞ்சாட்டு

சில கூட்டுறவுச் சங்கக் கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க கூடிய விலைக்குச் சில பொருட்கள் விற்கப்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் அரிசியின் விலை 36ரூபாவாகவும் சீனி 65 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டு பெரும்பாலான கூட்டுறவுச்சங்கக் கடைகளில் விற்கப்படும் நேரத்தில் ஒருசில கூட்டுறவுச் சங்கங்களில் அரிசி கிலோ 40 ரூபாவாகவும் சீனி 70 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

குறிப்பிட்டசங்கத்தில்ஒருவருக்குஒருகிலோசீனி 70 ரூபாவுக்கும் பிறிதொருவருக்கு அரைக்கிலோ சீனி 55 ரூபாவுக்கும் விற்கப் படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (து-133)

# கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை ஊரடங்கு நீக்கப்பட்ட ஒருமணி நேரத்தில் கல்லூரியில் வைத்து வழங்கப்படும்.

அன்றைய தினம் கொடுப்பனவுப் பெறத் தவறியவர்கள் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என கல்லூரியின் பதிவாளர் வி.வைத்தியகுமார் தெரிவித்துள்ளார்.(து-133)

# தென்மராட்சிக்கு இன்று பரீட்சார்ந்த பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவை இன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

ஊரடங்குத் தளர்த்தப்படும் நேரத்தில் பரீட்சார்த்தமாகச்இச் சேவை மேற்கொள்ளப்படவுள்ளதாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் கணேசபிள்ளை தெரிவித்தார்.

பயணிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப சேவையிலீடுபடும் பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பருத்தித்துறையிலிருந்து மந்திகையூடாக வரணி வரைக்கும் பஸ் சேவை நடத்தப்படுவதாக அவர் கூறினார்.(ச)

# யாழ்ப்பாணத்தில் காணாமல் போவோர் எண்ணிக்கை அதிகரிப்பதாக தெரிவிப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் பல முறைப்பாடுகள் பதிவு

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவட்டாரங்கள் தெரிவித்தன.

தென்மராட்சி உசன் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கிருஷ்ணன் நகுலேஸ்வரன் காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

உசன் சவாரி மடத்தடிப் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் நகுலேஸ்வரன் கடந்த 13 ஆம் திகதி விசாரணைக்காக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர் அவர் விடுவிக்கப்படவில்லை. இது குறித்து இராணுவத்தினரிடம் கேட்டபோது கிருஷ்ணன் நகுலேஸ்வரனை தாங்கள் கைது செய்யவில்லை என்று கூறியதாக உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

வடமராட்சி அல்வாய்க் கிழக்கு அத்தாய் அடியைச் சேர்ந்த தங்கராஜா தவரூபி (வயது -16) என்ற இளம்பெண்ணும் காணாமல் போயுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்காக கடந்த 11 ஆம் திகதி சென்ற தங்கராஜா தவரூபி வீடு திரும்பவில்லை. இது குறித்து அவரது சகோதரரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

அதேபோல் யாழ்.மாதகல் சகாயபுரம் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற சகோதரர்கள் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளனர்.

சகாயபுரம் பகுதியினைச்சேர்ந்த ஹொலின் (வயது-26) அவரது சகோதரரான றெஜி (வயது-24) உள்ளிட்ட நான்கு பேர் கடந்த 24 ஆம் திகதி விறகு வெட்டுவதற்காக அப்பகுதி காட்டுக்குச் சென்றுள்ளனர்.

அப்போது சகோதரர்கள் இருவரையும் கடற்படையினர் கைது செய்து அவர்களது முகங்களையும் கைகளையும் கட்டிக் கொண்டு சென்றுள்ளனர்.

அவர்களை விடுவிக்குமாறு உறவினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டபோது தாம் அவர்களைக் கைது செய்யவில்லை என்று தெரிவித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.(ச)


# வத்தளையில் கிளைமோர் மீட்பு

(கொழும்பு)

வத்தளை பனமுகனப் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

தேடுதலின்போது இரண்டு கிளைமோர்கள், நான்கு டெட்டனைட்டர்கள், எட்டு கைக்குண்டுகள், ஒரு ரி-56 ரகத் துப்பாக்கி, 115 ரவைகள் என்பவை மீட்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதையடுத்து மேற்கொண்ட விசாரணைகளின்போது 16 ஆண்களும் இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)



தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.அடைகலமாதா தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் அகதிகள் மர நிழலில் சமையலில் ஈடுபட்டுள்ளதையும் இவர்களுக்கான குடிநீர் யாழ். மாநகரசபையினால் பௌசர் மூலம் விநியோகிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

-படங்கள்:-திலீவின்பன்

# மன்னாரில் கடற்படையினரால் இரு இளைஞர்கள் கைது

(மன்னார்)

மன்னாரில் இளைஞர்கள் இருவரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மன்னார் இலந்தைமோட்டைக் கிராமத்தை நேற்று முன்தினம் பிற்பகல் திடீரென சுற்றி வளைத்த கடற்படையினர் ரி.நகுலேஸ்வரன் (வயது-26), ரி.கோணேஸ்வரன் (வயது-24) ஆகியோரை கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச)

> பிறர்நலத்திற்காக பாடுபடுவதுபோல் நடிக்காதீர்கள். உண்மையிலேயே பிறர் நலத்திற்கு பாடுபடுங்கள். தன்னலம் கருதுவது பிறவிப் பயனைக் கெடுத்து விடும்.
>
> —சுவாமி இராமதாசர்

வலம்புரி

# அமைச்சுப் பதவிக்கு சந்திரசேகரனும் அடிபணிந்தார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்து கொண்ட செய்தி ஆச்சரியத்திற்குரியதல்ல.

ஆளுந்தரப்பு எதுவோ அதனுடன் சேர்ந்து கொள்ளும் ஒரு பாரம்பரியத்தை காலஞ் சென்ற தொண்டமான் அவர்கள் கடைப்பிடித்து வந்தார்கள்.

ஆட்சியாளர்களுடன் சேர்ந்து மலையக மக்களின் உரிமைகளைப் பெறுவதைவிட வேறுவழியில்லை என்ற தொண்டமானின் முடிபு அரசியல் புலத்தில் நியாயமானதாக இருக்கலாம்.

இதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எப்போதுமே ஆளுந்தரப்புடன் சேர்ந்து கொள்வது வழக்கமாகவே இருந்து வந்துள்ளது.

அவ்வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தற்போதைய தலைவர் ஆறுமுகம் தொண்டமானும் தனது பேரனின் யுக்தியைக் கையாண்டு ஆளுந்தரப்புடன் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொள்கிறார்.

ஆளுந்தரப்புடன் சேர்ந்துமலையக மக்களின் உரிமைகளைப் பெறுவதே ஒரேவழி என்ற தொண்டமானின் முடிபு அவரின் மறைவிற்குப் பின்னரும் பின்பற்றப்படுகின்ற போதிலும்,

மலையக மக்களின் உரிமை முழுமையாகக் கிடைத்துவிட்டதா? என்றால் அதுதான் இல்லை.

மலையக மக்களின் பலமான அரசியல் கட்சியாக இருக்கக் கூடிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் காலாகாலமாக ஆட்சியாளர்களுடன் சேர்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்ற போதிலும் மலையக மக்களின் அடிப்படைத் தேவைகள் கூட நிறைவேற்றப்படவில்லை.

'லயம்' என்ற வாழ்வியல் முறைமை அவர்களை விட்டு நீங்குவதாக இல்லை. கூடவே வழங்கப்படும் ஊதியம் மானிய காலச் சமுதாயத்தை இன்னமும் நினைவுபடுத்துவதாக உள்ளது.

மலையகத் தொழிலாளர்களின் கல்வியறிவு, அவர்களின் மருத்துவ வசதி என்பவற்றை எடுத்து ஆராய்ந்தால் கொத்தடிமைத்தனத்தின் கொடூரம் வெளிப்படும்.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது ஆளுந்தரப்புடன் சேர்ந்து மலையக மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற கோட்பாடு நடைமுறையில் தோல்வி கண்டு விட்டது என்றே கூறவேண்டும்.

அப்படியானால் ஆளுந்தரப்புடன் சேர்ந்து கொண்டதால் சௌமியமூர்த்தி தொண்டமானின் குடும்பமும் அவரது சந்தானமும் முன்னேற்றம் கண்டது என்பதை மட்டுமே இப்போதைக்குக் கூற முடியும்.

பரவாயில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தொட்டிற் பழக்கம் அது என்று விட்டு விடலாம் என்றால் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனின் பாதையும் அதுவாக இருப்பது ஆச்சரியம் தருவதாகவுள்ளது.

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் மலையகத்தின் பங்களிப்பு என்ன என்ற வரலாற்றின் கேள்விக்குச் சந்திரசேகரனைச் சுட்டிக்காட்டலாம் என்றால் அதுவும் பாழாகிப் போயிற்று.

அட, ஆறுமுகம் தொண்டமானைப் போல் சந்திரசேகரனும் அமைச்சுப் பதவிக்கு அடிமையாகிப் போனார் என்ற துயரச் செய்தி மலையக மக்களின் எதிர்காலத்திற்கும் ஈழத் தமிழர்களுடனான உறவுக்கும் ஆரோக்கியமானதல்ல என்ற செய்தியை வருத்தத்தோடு கூறித்தான் ஆகவேண்டும்.

# பல்கலைக்கழகத்தில் நடந்தது என்ன? ஆறு பீடாதிபதிகள் கூட்டாக அறிக்கை

யாழ் பல்கலைக்கழக சம்பவங்கள் தொடர்பாக பீடாதிபதிகள் ஆறுபேரும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த இருவார காலமாக யாழ்.குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையின் பின்னணியை பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்படுத்தி சில ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் உண்மைக்குப் புறம்பான பிரசாரம் பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதால் பல்கலைக் கழகத்தில் விசார நடவடிக்கைக்குப் பொறுப்பான பீடாதிபதிகள் ஆறுபேரும் உண்மை நிலைமையை அனைவருக்கும் அறிந்து கொள்ளும் வகையில் இவ் அறிக்கையை வெளியிடுகிறோம்.

கடந்த 11.08.2006 ஆம் திகதி திடீரென பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு 63 மணிநேரம் தொடர்ந்து அமுலில் இருந்தது. அச் சமயம் திருநெல்வேலியில் அமைந்துள்ள இரு மாணவர் விடுதிகளிலும் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக்கழக விடுதியிலுமாக ஏறத்தாழ 350 மாணவ மாணவிகள் தங்கியிருந்தனர். இவர்கள் ஊரடங்கு வேளைகளில் உணவு, நீர் விநியோகம் இன்றி சிரமப்பட்டனர். 14.08.2006 திங்கட்கிழமை ஊரடங்கு உத்தரவு இரண்டரை மணிநேரம் நீக்கப்பட்டதும் இச் சிரமங்களை ஓரளவு நீக்கினோம்.

அன்று மதியம் பாலசிங்கம் விடுதியின் நுழைவாயிலின் படலைக்கருகில் ஒரு சில மாணவர்கள் கல்லாசனத்தில் பேசிக் கொண்டிருந்த போது பிற்பகல் 1.15 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் மாணவர்கள் மீது கிரனைட் வீசப்பட்டது.

இது மாணவர் மத்தியில் பதற்றத்தை உருவாக்கியது. மறு நாள் 15.08.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாலசிங்கம் விடுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த இன்னொரு மாணவனும் பல்கலைக்கழகத்தில் இருந்து அரைக் கிலோமீற்றர் தொலைவில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் வைத்துக் கொல்லப்பட்டனர்.

இது மாணவர் மத்தியில் மேலும் பெரும் பீதியை ஏற்படுத்தியது. மாணவர்களின் பீதியைத் தணித்து அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக துணைவேந்தர், யாழ்.நீதிவான், யாழ்.அரசாங்க அதிபர் ஆகியோர் மாணவர்களைச் சந்தித்து உரையாடி நம்பிக்கை ஊட்டினர்.

பின்னர் விடுதிக்குள் ஏதோ வெடித்ததாகப் பரப்பப்பட்ட கதையைப் பொய்ப்பிக்க உண்மையில் கிரனைட் வெடித்த மதில் கரையோர இடத்தை துணைவேந்தர், யாழ்.நீதிவான், யாழ்.அரசாங்க அதிபர் ஆகியோர் யாழ்ப்பாண இராணுவ பிரதம சிவில் இணைப்பாளரை அழைத்துச் சென்று காண்பித்து பரஸ்பர நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி பிரதான வளாகம், பாலசிங்கம் ஆண்கள் விடுதி, ஆனந்தகுமாரசாமி பெண்கள் விடுதி ஆகியனவும் அவற்றின் சுற்றாடலும் அச்செழு, யாழ்ப்பாணம், உடுவில் ஆகிய மூன்று பிரிகேட்டுக்களைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரிகள், இராணுவத்தின் யாழ்.மாவட்டத்திற்கான பிரதம சிவில் இணைப்பதிகாரி ஆகியோரது பிரசன்னத்துடனும் வழிகாட்டலுடனும் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான காவல்துறையினரின் உதவியுடனும் பல நூறு இராணுவத்தினரால் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

விடுதிகளில் தங்கியுள்ள ஏறத்தாழ நூற்று நாற்பது பெண் மாணவிகளும் நூற்றிப்பத்து ஆண் மாணவர்களும் வீடியோப் படம் எடுக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இத் தேடுதலின் போது விடுதிகளில் மாணவர் அல்லாத வெளியார் எவருமோ அன்றி ஆட்சேபனைக்குரிய பொருட்கள் எவையுமோ காணப்படவில்லை.

மாணவர் மையம் சோதனையிடப்பட்டபோது பதில் துணைவேந்தருடன் பட்டப்பின் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, மெய்யியல்துறைத் தலைவர் பேராசியர் சோ.கிருஷ்ணராஜா ஆகியோரும்கூட இருந்தனர்.

இச் சோதனையின் போது அம் மையத்தில் அமைந்துள்ள மாணவர் ஒன்றியத் தலைவரினது காரியாலயத்தில் பகீரதன் என்ற கலைப்பீட மூன்றாம் வருட மாணவன் காணப்பட்டார். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் எதற்காக அவர் அங்கு வந்தார் என அவரை வினவிய போது அவர் காரியாலயத்தில்உள்ள தொலைபேசியை உபயோகிக்க முதல் நாள் வந்ததாகவும் ஊரடங்கு வேளை அமுலாக முன்னர் தமது இருப்பிடத்திற்கு திரும்ப முடியாது போனதால் ஊரடங்கு அமுலான முதல் நாள் பிற்பகல் முதல் அங்கு தங்க வேண்டி ஏற்பட்டதாகவும் கூறினார்.

அன்று மாலை பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தமது வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது பல்கலைக்கழக் கைலாசபதி கலையரங்கிற்கு சமீபமாக அமைக்கப்பட்டிருந்த உயிர் நீத்தோருக்கான நினைவுத் தூபி சேதப்பட்டிருந்தமையை அவதானித்தனர். இதை நாமும் மறுநாள் காணக்கூடியதாகவிருந்தது.

அன்று பிற்பகல் நான்கரை மணியளவில் வளாகத்தின் சில பகுதிகள் இராணுவத்தினரால் மீண்டும் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது. இத் தேடுதல் பற்றி இராணுவத்தினர் பதில் துணைவேந்தருக்கு அறிவிக்கவில்லை.

இச் சமயத்தில் கடமையிலிருந்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மூவரினதும் கூற்றின்படி பிரதான வளாகத்தின் ஒருசில காரியாலயங்களும் கலையரங்கமும் அவற்றின் சுற்றாடலும் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

தேடுதல் பிற்பகல் நான்கரை மணிமுதல் இரவு ஏழரை மணிவரை நடத்தப்பட்டது. தேடுதல் செய்தவர்களுடன் சென்றிருந்த பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தமது காரியாலயத்திற்கு இரவு 6.45 மணிக்கு திரும்பினர்.

அதன் பின்னர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களின் காரியாலயத்திற்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த இராணுவத்தினர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களில் இருவரை தமது மோட்டார் சைக்கிள்களில் தம்முடன் ஏற்றிச் சென்று மாணவர் மையத்தின் பின்புறத்திற்கு சமீபமாக அமைந்துள்ள மின் கம்பத்தின் அடியில் ஒன்றாகக் கட்டப்பட்டிருந்த ஐந்து கிரனைட்டுக்களை மோட்டார் சைக்கிள் தலை விளக்குகளினதும் ரோச் லைட்டினதும் வெளிச்சத்தின் உதவியுடன் காட்டி தாம் அவற்றை மீட்டுள்ளதாக் கூறி வீடியோப் படம் எடுத்தபின்னர் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

ஆயுதங்களும் வெடிபொருட்களும் பெருமளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சில ஊடகங்கள் அறிவித்ததை பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகவே பல்கலைக்கழக சமூகம் கருதுகிறது.

20 ஆம் திகதி இருட்டு வேளையில் மாணவர் மையத்திற்கு சமீபமாகக் காணப்பட்டதாகக் கூறப்பட்ட ஐந்து கிரனைட்டுக்களும் தேடுதல் நடத்தியவர்களால் கொண்டு வரப்பட்டு பின் எடுத்துச் செல்லப்பட்டதா? என்ற நியாயமான ஐயத்தை பல்கலைக்கழக சமூகத்தினரிடையே ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்ற பல்கலைக்கழக சமூகத்தின் ஐயத்திற்கு 20 ஆம் திகதி நிகழ்வுகள் வலுவூட்டியுள்ளன.

இந் நடவடிக்கைகள் பல்கலைக்கழக நிர்வாகத்தின் பரஸ்பர நல்லெண்ணத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு குந்தகம் விளைவித்துள்ளது. ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை விட்டு எமது கவலையையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவதோடு இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் இடம் பெறாமல் இருப்பதைஉறுதி செய்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களை விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆகஸ்ட் 20 ஆம் திகதிய நிகழ்வுகளின் பின் மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உத்தியோகஸ்தர்கள், கல்வி சாரா ஊழியர்கள் அனைவருமே அச்ச உணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 1983முதல் பல நல்ல கல்விமான்களின் சேவையை இழந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த மூன்று ஆண்டுகளாக தனது ஆசிரியர்களின் பலத்தை அதிகரித்துக் கொள்வதில் சிறியளவில் தானும் வெற்றி கண்டிருந்தது.

இப்போது உருவாக்கப்பட்டிருக்கும் சூழ்நிலை மீண்டும் பயிற்றப்பட்ட இளம் ஆசிரியர்களை பல்கலைக்கழகம் இழக்கும் நிலையை உருவாக்கிவிட்டது.

மாணவர்கள் தம்மால் இவ்வாறான சூழ்நிலையில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது என்கின்றனர். ஏறத்தாழ ஆயிரத்து 150 வெளிமாவட்ட மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கின்றனர். இவர்கள் தமது பெற்றோர்,பாதுகாவலர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாதுள்ளனர்.

அவர்களில் ஏறத்தாழ 350 பேர் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ளனர். 800 பேர் வரை பல்கலைக்கழக சுற்று வட்டாரத்தில் உள்ள தனியார் வீடுகளில் தங்கியுள்ளனர். சமீபத்திய நிகழ்வுகளால் இவர்கள் தமது பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக கருதுகின்றனர்.

ஆகஸ்ட் 20 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடந்தது போன்ற நிகழ்வுகள் விடுதிகளிலும் அரங்கேற்றப்பட்டு தாம் தொந்தரவுக்குட்படுத்தப்படலாம் அல்லது பலியிடப்படலாம் என அஞ்சுகின்றனர். விடுதிகளில் உள்ளமாணவர்களின் உணவுத் தேவைகளைப் பல்கலைக்கழகம் கடந்த இரு வாரங்களாகக் கவனித்து வருகிறது. இதற்கு உதவிய நிறுவனங்களுக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாணவர் விடுதிகளை அகதிகள் முகாம்போல் பராமரிக்க வேண்டியுள்ளது. தனியார் வீடுகளில் தங்கியுள்ள மாணவர்கள் அச்ச உணர்வுடன் வாழ்வதுடன் உணவுக்குப் பணம் இன்றியும் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு ஓரிரு வாரங்களுக்குத் தேவையான நிதி உதவியை செய்ய பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களைத் தொடந்து பராமரிக்க பல்கலைக்கழகத்தால் முடியாது. மாணவர்களும் மனம் குழம்பிய நிலையில் தம்மால் இவ்வாறான சூழலில் கல்வி கற்ற முடியாது எனவும் தம்மை தமது சொந்த இடங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்து தருமாறும் வற்புறுத்திக் கேட்கின்றனர்.

ஆகவே இம் மாணவர்களை அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்க முன்னுரிமை தருமாறு யாழ்.அரசாங்க அதிபரைப் பல்கலைக்கழக நிர்வாகம் வற்புறுத்திக் கேட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது பெருச் சொத்துக்களில் ஒன்றாகக் கருதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதன் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டுமாயின் அங்கு வேண்டத்தகாத நடவடிக்கைகள் தவிர்க்கப்பட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் தமது கல்விச் செயற்பாடுகளை அச்ச உணர்வின்றி முன்னெடுக்கக் கூடிய சூழல் நிலவுதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

ஆகவே இராணுவ முரண்பாடுகளுடன் பல்கலைக்கழகத்தைச் சம்பந்தப்படுத்தி பிரசார நோக்குடன் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளிப்படுத்தி பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்துவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் முரண்பாட்டின் நடுவில் பல்கலைக்கழகத்தை நிறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாது பல்கலைக்கழகம் தனது பணிகளை முன்னெடுக்க உதவ வேண்டும் என்றும் விநயமாகக் கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# வன்னிக்கான அத்தியாவசியப் பொருட்கள் நேற்று லொறிகள் மூலம் அனுப்பி வைப்பு

## நீண்ட நேர காத்திருப்பின் பின்னர் அனுமதி

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதிக்கான அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிய லொறிகள் இராணுவத்தினரின் நீண்ட இழுபறியின் பின்னர் நேற்று மாலை தான் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரச உயர்நிலையில் வன்னிக்கு பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்ட போதும் ஓமந்தையில் இராணுவத்தினர் தமக்கு அத்தகைய அனுமதி உத்தரவு ஏதும் வரவில்லை என்று நேற்று மாலை 4 மணி வரை லொறிகளை அனுமதிக்கவில்லை.

அதன் பின்னரே கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இந்த லொறிகள் அனுமதிக்கப்பட்டன. கிளி நொச்சி மாவட்டத்திற்கு 25 லொறிகள் வந்துள்ளன.

இவற்றில் 9 கூட்டுறவுச்சங்கங்களிற்கான விற்பனைப் பொருட்களை கொண்டு வந்தன. 12 மெற்றிக் தொன் சீனி மற்றும் 6 லொறிகளில் கோதுமை மா, 2 மெற்றிக் தொன் திரிபோசா மா ஆகியனவும் வந்துள்ளன.

ஏனைய லொறிகளில் நிவாரணப் பொருட்கள் வந்துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 45 லொறிகளில் பொருட்கள் வந்துள்ளன. இருப்பினும் மருத்துவமனைகளுக்கான மருந்துப்பொருட்களுக்கு இன்றும் அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# அரசாங்கத்தில் இணைவது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் ஆலோசனை!

(கொழும்பு)

அரசாங்கத்தில் இணைவது குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் மகிந்தவின் சகோதரர் பசில் ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஹக்கீம் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு தொடங்கிய இந்த ஆலோசனைக் கூட்டம் மூன்று மணிநேரம் நீடித்ததாக தெரிவிக்கப்பட்டது.

மூதூர் முஸ்லிம்களின் பிரச்சினை குறித்தும் இந்த நிலையில் அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்திருக்கவேண்டுமென்றும் பசில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தில் இணைவது குறித்து முடிவெடுக்க கால அவகாசம் தேவை என்று ஹக்கீம் தரப்பில் கூறப்பட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே அரசாங்கத்தில் இணையுமாறு ஜே.வி.பிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

அரசாங்கத்தில் இணைவதற்காக 20 அம்சக்கோரிக்கைகளை ஜே.வி.பி.முன் வைத்துள்ளது. இதில் முக்கியமாக மூன்று கோரிக்கைகளை நிராகரித்திருக்கும் சுதந்திரக்கட்சி அதற்கு மாற்று யோசனைகளையும் பரிந்துரைத்துள்ளது.

இது விடயத்தில் ஜே.வி.பி.எதிர்வரும் வாரம் முடிவெடுக்கவுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ச–5)

# வடக்கு கிழக்கை பிரிக்கவேண்டாமென ஐக்கிய சமத்துவக்கட்சி மனுத்தாக்கல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கை பிரிக்கக்கோரி ஜே.வி.பி. தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்ய வேண்டாமெனக்கோரி மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கை இரண்டாகப் பிரித்து இரண்டு மாகாணங்களை உருவாக்குமாறு கோரி ஜே.வி.பி.மனுவொன்றை தாக்கல் செய்திருந்தது.

அதனை விசாரிக்கவேண்டாமென ஐக்கிய சமத்துவக்கட்சி என்ற அமைப்பின் செயலாளர் சிறிதுங்க ஜெயசூரிய உயர் நீதிமன்றில் நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளார்.

வடக்கு கிழக்கை இணைப்பது அரசியல் சார்ந்த விடயம் என்றால் அது தொடர்பான தீர்மானத்தை அரசியல் அதிகாரதரப்பே மேற்கொள்ளவேண்டும்.

நாடு யுத்தத்தில் பாரிய பிரதிகூலங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களை ஒன்றாக இணைப்பது இனப்பிரச்சினை அபிப்பிராயமெனில் இந்த விடயம் தொடர்பில் அரசியல் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளவேண்டுமெனவும் அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தரணி சிறிநாத் பெரேராவின் ஆலோசனையின் பெயரில் சிரேஷ்ட சட்டத்தரணி பற்றி வீரக்கோன் இம் மனுதாரர் சார்பில் ஆஜராகவுள்ளார். (ச)

## சந்திரசேகரன்...

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் முன்னதாகவே இணைந்திருக்கவேண்டும். இப்போது அவர்கள் அரசாங்கத்தில் இணைந்திருப்பதன் நோக்கத்தின் பின்னணி குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் கட்சிகளை இணைப்பது நல்லது அல்ல. இத்தகைய முடிவெடுப்பதற்கு முன் பலமுறை யோசிக்க வேண்டுமென்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
### ADMISSION -2007 FOR GRADE 1, GRADE 4 AND GRADE 6

### தரம் 1, தரம் 4, தரம் 6ற்கான அனுமதி -2007

1. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2006 முதல் 15.09.2006 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15.09.2006 க்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09.2006 புதன்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
2. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
3. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
4 விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
5 ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00
6 வயதெல்லைகள்
   அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2001 க்கும் 31.01.2002க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1996 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   இ) தரம் 4 விண்ணப்பதாரி 01.02.1998 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
7 தரம் 4, 6 ற்கான பிரவேசப்பரீட்சை 14.10.2006, சனிக்கிழமை காலை 9 .00 மணிக்கு ஆரம்பமாகும்.


குறிப்பு: i. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதியம் தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகின்றது.

ii. தரம் 12 (A/L 2009 Batch)ற்கு அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். 01.02.1990 இல் அல்லது அதற்குப்பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

அதிபர்கள்

(486)


# இலங்கைத் தூதரகம் முன்பாக மலேசியாவில் ஆர்ப்பாட்டம்




முல்லைத்தீவு வல்லிபுனம் செஞ்சோலை வளாகத்தில் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சை கண்டித்து மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

32 அமைப்புக்களைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

உலகத் தமிழர் நிவாரண நிதி, மலேசிய இந்து இளைஞர் மன்றம், மலேசிய தமிழ்க் கல்வி அறிவாலயம், உலகத்தமிழர்மா மன்றம்; மலேசிய திராவிடக் கழகம், மலேசிய தமிழ் நெறிக்கழகம், மலேசிய இந்து இளைஞர் பேரவை, தமிழ் இளைஞர் மணி மன்றம் ஆகியவற்றின் நிர்வாகிகள் மற்றும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் குலசேகரன் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் பல பதாகைகளையும் தங்கியிருந்தனர். (ச)

## மற்றொரு...

றொக்வூட் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.நோக்கிப்புறப்பட்டுள்ள கப்பல் இதற்கு முன்னர் மூதூரில் இடம் பெயர்ந்தவர்களின் நிவாரண சேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

கப்பலின் பாதுகாப்புக்குறித்து அரசும் விடுதலைப்புலிகளும் உத்தரவாதம் அளித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கப்பல் மூலம் திருகோணமலை செல்லுபவர்கள் தமது குழுவின் ஏற்பாட்டில் கொழும்புக்கு அழைத்துவர நடவடிக்கையெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.(ச–5)

## மூன்றாவது...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் அனுமதியின்றி நுழைந்தமைக்காக மூன்று பொலிஸார் கைதுசெய்யப்பட்டனர். நல்லெண்ண நடவடிக்கையாக ஏற்கனவே இருவரை தமிழீழ தேசியத்தலைவர் விடுதலைசெய்ய உத்தரவிட்டிருந்தார்.

தற்போது மூன்றாவதுநபரும்நல்லெண்ண நடவடிக்கையாக விடுதலை செய்யப்பட்டுள்ளார் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை நேற்று விடுதலையான பொலிஸார் கண்ணீர் மல்க விடுதலைப்புலிகளிடம் இருந்து கண்காணிப்புக்குழுவினருடன் புறப்பட்டுச் சென்றார். நேற்றிரவு அவர் வீடு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## முகமாலையில்...

முகமாலையில் பதுங்குக் குழிகளை அமைக்கும் படையினருக்கு பாதுகாப்பாக வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வேளை விடுதலைப்புலிகளினால் வைக்கப்பட்ட குண்டு வெடித்தது. இதில் ஆறு படையினர் பலியானதாகவும் நான்கு பேர் படுகாயமடைந்ததாகவும் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

படுகாயமடைந்தவர்கள் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் முகமாலையை நோக்கி மோட்டார்த் தாக்குதல் நடத்தியதாகவும் அத் தாக்குதல் நடத்திய மோட்டார் இருந்த இடத்தை நோக்கி விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

முகமாலைக்கும் பளைப் பகுதிக்குமிடையே இவ் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச–5)

## ஊரடங்கு...

பாடசாலைகள் ஆரம் பிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் கல்வி அமைச்சர் தொடர்பு கொண்டதாகவும் தெரி விக்கப் பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள சில பாடசாலைகளில் தற்பொழுது ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலையால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 27.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.